NIRU
KONDAVIL.
பௌதிகவியல் (ஒளியியல்)
87 மீட்டல் வகுப்பு
செவ். வியா: 6 - 7 காலை
திரு. சௌந்தி
87 இரசாயனம்
(பொது இரசாயனம்)
திரு. செல்வா
திங்கள். புதன் : 2 - 3
சனி. ஞாயிறு: 9 - 10

# உதயன்

விலை ரூ.1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

NIRU
TUITION CENTRE
Kondavil
A/L 87 Day Class
தாவரவியல்-
ஆஞ்ஜியோஸ் பேர்ம் பிரிவினைகள்
ஆரம்பம்: 18-11 86
காலை 8 00
87 - அலகு 10
இனப்பெருக்கம்
திரு. பாலா
விலங்கியல் -
முள்ளந்தண்டிலியம்
திரு. ஞானேந்திரன்

ஏடு:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 27 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 10 13-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 306

# வல்லைப் பாலம் நேற்று தகர்ப்பு

## ஹெலியில் வந்த சிப்பாய்கள் குண்டு வைத்துத் திரும்பினர்

— உதயன் வல்வைச் செய்தியாளர்: சி. சுந்தரலிங்கம் —

வல்வெட்டித்துறை, நவ.13

வல்லைப்பாலம் நேற்றுப் பகல் இராணுவத்தினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

ஹெலிக்கொப்டரில் இருந்து இறக்கப்பட்ட சிப்பாய்கள் வல்லைப் பாலத்துக்கு அடியில் குண்டுகளை வைத்துப் பொருத்திவிட்டு 'ஹெலி'யில் ஏறிச் சென்றனர்.

சில விநாடிகளில் பயங்கரச் சத்தத்துடன் வல்லைப்பாலம் தகர்ந்தது.

நேற்றுத் தொடர்ந்தும் வல்வை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்இடம் பெற்றது.

தொண்டமானாற்றுக்குச் செல்லும் வழியில் உள்ள காட்டுப்புலத்தில நின்று இராணுவத்தினர் வெளியே செல்லாதவாறு தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை நேற்று புதன் அதிகாலை வரை நடத்திக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் நான்கு ஹெலிக்கொப்டர்கள் அந்த இடத்தைச் சுற்றி வட்டமிடத் தொடங்கின. பின்னர் புலிகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஹெலிகள் ஈடுபட்டன. அதே நேரம் கடலில் இருந்து கப்பல்கள் பீரங்கித்தாக்குதலையும் மேற் கொண்டன.

பின்னர் பீரங்கித் தாக்குதல் நிறுத்தப்பட்டது. புலிகள் தொடர்ந்தும் தொண்டமானாறுமுகாம் நோக்கி மோட்டோ ஷெல், ரொக்கட் லோஞ்சர் தாக்குதலைகளை நடத்திக் கொண்டிருந்த சமயத்தில் மூன்று ஹெலிக்கொப்டர்கள்திடீரென்று வல்லைப்பாலம் நோக்கி வந்தன.

இரண்டு ஹெலிக்கொப்டர்கள் பாலத்தின் சுற்றுடலில் ஆட்டிலறி, 50 கலிபர் ஆயுதங்களைப் பாவித்துத் தாக்குதல்கள் நடத்தின.

அச்சமயம் ஒருஹெலிக்கொப்டர் வல்லைப்பாலத்தின்மீது தரை இறங்கிய போது அதில் இருந்து சிப்பாய்கள் பாலத்துக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலி சோபை இழந்துகாணப்படுகிறது

அச்சுவேலி, நவ. 13

அச்சுவேலி கடந்த இரு தினங்களாக பொலிவிழந்து சோகமயமாக வெறிச்சோடிக் காட்சியளிக்கின்றது.

பல வியாபார நிலையங்கள் திறக்கப்படவில்லை. சந்தை கூடவில்லை, பஸ் நிலையம் உட்பட அச்சுவேலி நகரம் வெறிச்சோடிக் கிடக்கிறது.

அச்சுவேலி பகுதி பாடசாலைகள் செவ்வாய், புதன்கிழமைகளில் இயங்கவில்லை.

அச்சுவேலிப் பகுதியில் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கும் மரணங்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக் கொடிகள், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. (இ-11)

## வடமராட்சியில் புலிகள் தொடர்ந்து கடும் சமர்

யாழ்ப்பாணம், நவ. 13

வடமராட்சிப் பகுதியில் வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, பருத்தித்துறை ஆகிய முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினர் நேற்றும் காலை தொடக்கம் இரவு வரை கடும் தாக்குதல் நடத்தினர்

அதன் மத்தியிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் படையினரை எதிர்த்து மிகக் கடுமையான நேரடி மோதலில் ஈடுபட்டனர். அதன் மூலம் இராணுவத்தினர் மக்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைய விடாது தடுத்து விரட்டினர்.

இம் மோதல்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

வடமராட்சியில் உள்ள தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை இராணுவ முகாம்களிலுள்ள இராணுவத்தினர், கடற்படையினரினதும், விமானப் படையினரினதும் உதவியுடன் இப்பகுதிகளில் நேற்று இரண்டாவது நாளாகவும் பெரும் இன ஒழிப்பைச் செய்வதற்கு முனைந்தனர்.

நேற்று அதிகாலையில் தொண்டமானாறு முகாமைச் சுற்றி 4 ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டன. அதே சமயம் முகாமையிட்டு வெளியேறிய இராணுவத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ★ இதற்கு வரி விலக்கு

கொழும்பு, நவ. 13

ஒருவர் சேமலாப நிதியாகவோ, ஓய்வூதிய நிதியாகவோ பெறும் பணத்தை அரச கடனீட்டுத் திட்டங்களில் வைப்புச்செய்தால் வரிவிலக்கு உண்டு.

அப்பணத்தை வேறு முதலீட்டுத் திட்டங்களில் வைப்புச் செய்தால் 20 சதவீத வரி அறவிடப்படும்.

இந்தக்கட்டுப்பாட்டை நிதி அமைச்சர் தனது வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்திருக்கிறார். (இ-எ)



இச்சந்தி முனி

பாத்தியே உவங்களை சோத்துப்பானைக்குச் சுடுறதும் பெரியவீரம் எண்டு நினைச்சிட்டாங்கள்!

## ரூபா 25,000 ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

தமிழ் ஈழம் போர் நிதியில் இருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு என ஒதுக்கப்பட்ட ரூபா 25,000 நேற்று யாழ் ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கே இந்தப் பணம் ஒதுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

### பிரபாவை விடுவிக்கக் கோரி

# முல்லைத்தீவு கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டங்கள்

யாழ்ப்பாணம், நவம்பர் 13

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று கோரி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. இந்திய அரசின் அந்த நடவடிக்கையைக் கண்டித்துக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

ஆயிரக்கணக்கான மக்கள், மாணவர், மாணவிகள் இவற்றில் கலந்து கொண்டனர்.

இவை பற்றிய விவரங்கள் வருமாறு;

### முல்லைத்தீவில்

நேற்றுக்காலை 10 மணி அளவில் முல்லைத்தீவுப் பகுதியில் செம்மலையில் இருந்து ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பமானது

குமுழமுனை, தண்ணீரூற்று ஆகிய கிராமங்கள் ஊடாக வந்த இந்த ஊர்வலம் தண்ணீரூற்று வித்தியானந்தக் கல்லூரியை வந்தடைந்தது.

இரண்டாவது ஊர்வலம் சிலாவத்தையில் இருந்து ஆரம்பமாகியது.

வட்டுவாகல், முள்ளியவளை, வற்றாப்பளை ஊடாக வந்த இந்த ஊர்வலமும் இறுதியில் வித்தியானந்தக் கல்லூரியை வந்தடைந்தது.

இந்த ஊர்வலங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். 200க்கு மேற்பட்ட டிராக்டர்களும் கலந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரிலும் ஊர்வலங்கள்

யாழ்ப்பாணம், நவ.13

தடுப்புக்காவலில் சென்னையில் வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை விடுவிக்கக் கோரித் தொடர்ச்சியான போராட்டம் யாழ்ப்பாணத்திலும் நடக்கும்.

தமிழீழ மக்கள் போராட்டக் குழு இப்படி அறிவித்துள்ளது.

தமிழீழப் போராளிகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## உமாவும் வீட்டுக் காவலில்

கொழும்பு, நவ.13

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் (புளொட்) தலைவர் திரு. உமா மகேஸ்வரன் புதுடில்லியில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார் என்று பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனத்தை மேற்கோள் காட்டி ரூபவாஹினி நேற்றிரவு அறிவித்தது.

இதனை பி.பி.ஸி. வானொலியும் நேற்று ஊர்ஜிதம் செய்தது.(அ)

## போராளிகள் கைது அதிர்ச்சி வைத்தியமா?

### கண்டித்து ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13

தமிழகத்தை ஈழப் போராட்டத்தின் பின்புலமாகக் கொண்டு இந்திய மக்களின் ஆதரவோடு நீண்டகாலம் இயங்கிவந்த போராளிகள் இம்மாதம் 8 ஆம் திகதி திடீரெனக் கைது செய்யப்பட்டனர். இந்திய அரசின் மத்திய புலனாய்வுத் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட இக் கைதிற்கான காரணங்கள் இந்திய அரசினாலோ, தமிழக அரசினாலோ இன்னமும் தெளிவாக முன் வைக்கப்படவில்லை.

ஈரோஸ் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட போராளிகள் அனைவரிடமும் இந்திய மண்ணில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலிப் பகுதியில் நேற்றும் ஹெலித் தாக்குதல்

### ஒருவர் உயிரிழப்பு; பலர் காயம்

அச்சுவேலி, நவ .13

அச்சுவேலிப் பகுதி தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றுப் புதன்கிழமையும்ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு உள்ளாகியது. நேற்று அதிகாலையில் மக்கள் துப்பாக்கி குண்டுவீச்சு சத்தங்கள் கேட்டு விழித்தெழுந்தன.

அதிகாலை 5-30 மணி தொடக்கம் நான்கு ஹெலிக்கொப்டர்கள் சுற்றிச்சுற்றி உயரத்தில் நின்று சுட்டுக்கொண்டே இருந்தன.

இதனால் அச்சுவேலி வடக்கு, வல்லை, அச்சுவேலி நேர்றோட்டு பகுதியில்உள்ள வீடுகள் பலத்த சேதத்திற்கு உள்ளாகின. பலர் படுகாயம் அடைந்தனர். ஒருவர் உயிரிழந்தார்.

வானத்தில் இருந்து பொதுமக்கள் நடமாடும் பகுதிகள்மீது தாக்குதல்கள் மேற்கொண்ட ஹெலிக்கொப்டர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின்எதிர்த்தாக்குதலால் மிக உயரத்தில் நின்றே

(4ஆம் பக்கம் பார்க்க)

## சோற்றுப் பானையை துளைத்த குண்டு!

வல்வெட்டித்துறை, நவ.13

அடுப்பில் இருந்த சோற்றுப் பானையைத் துளைத்துக்கொண்டு சென்றது ஹெலிக்கொப்டரில் இருந்து வந்த துப்பாக்கிக் குண்டு!

மு. கிருஷ்ணபிள்ளை, வல்வெட்டி வாசி நேற்றுத் தனது வீட்டு அடுப்பில் சோறு சமைப்பதற்காக தண்ணீருடன் பானையை வைத்துவிட்டு அரிசி வாங்கக் கடைக்குச் சென்றார்.

அந்தச் சமயம் பார்த்து அவரின் வீட்டின்மீது ஹெலிக்கொப்டரில் இருந்து துப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## போர்முனையிலிருந்து நவீன ஆயுதத்துடன் திரும்பிய குரங்கு!

அச்சுவேலி, நவ.13

போர் முனையிலிருந்து திரும்பிய போராளிகளுடன் காணப்பட்ட குரங்கு நவீன ஆயுதம் ஒன்றை வைத்திருந்த காட்சி அச்சுவேலி மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

அச்சுவேலி வல்லைவெளியில் இராணுவத்தினரை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட எதிர்த் தாக்குதலின்போது புலி

(4ஆம் பக்கம் பார்க்க)

## ★ சிகரெட், சாராயம், பியர் விலை அதிகரிப்பு

### வேறு பொருள்களுக்கு விலை உயர்வில்லை

கொழும்பு, நவ. 13

★ சிகரெட் விலை 5 சதத்தினால் அதிகரிப்பு.

★ ஒரு போத்தல் சாராயம் 6 ரூபாவினால் அதிகரிப்பு.

★ ஒரு போத்தல் பியர் 2 ரூபா 70 சதத்தினால் அதிகரிப்பு.

இந்த அதிகரிப்புக்களை மட்டும் கொண்டதாக தனது பத்தாவது வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் ரொனி டிமெல் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் எவையும் அதிகரிக்கப்படவில்லை.

கோதுமையின் இறக்குமதி தீர்வை 5 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாகஅதிகரிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பினால் ஏற்படும் தாக்கத்தை உணவுத் திணைக்களம் பொறுத்துக் கொள்ளும். அதனால் பாண் மற்றும் கோதுமைப் பண்டங்களின் விலைகள் அதிகரிக்காது.

### இறக்குமதி தீர்வைகள் அதிகரிப்பு

வெளிநாட்டுச் சிகரெட்டுக்கள், வெளிநாட்டு பீடிகள் ஆகியவற்றின் இறக்குமதித் தீர்வை ஒரு கிலோவுக்கு முறையே 65 ரூபாவாகவும் 10 ரூபாவாகவும் அதிகரிக்கப்படும்.

வெளிநாட்டு மதுபானங்களின் இறக்குமதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## விரிவுரை பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், நவ.13

யாழ் பல்கலைக் கழக நுண் கலைப்பீட, சித்த வைத்திய, மருத்துவபீட அனைத்து மாணவர்களும் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

இதேவேளை நேற்று மாலைஅனைத்து வெகுஜன அமைப்புகளும் அழைக்கப்பட்டு போராட்டத்தின் நியாயத்தன்மை பற்றி பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழுவினால் விளக்கப்பட்டது. (இ-10)

## சுபநேரம்

13—11—1986

வியாழக்கிழமை

சுபநேரம்:

7.37 முதல் 9.07 வரை

ராகுகாலம்:

1.37 முதல் 3.07 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதம் இன்று ஆரம்பம்

### காலக்கெடு முடிவடைந்தது

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ். பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதப் போராட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகின்றது.

பல்கலைக்கழக மாணவர் அமைப்புப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

காணாமற்போன மாணவன் விஜிதரன் தொடர்பாக இயக்கங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த காலக்கெடு நேற்றோடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்' மாநாட்டின் பின் பெரும் தாக்குதல்

### பொதுமக்களை தயாராக வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,நவ.13

எதிர்வரும் 15 ஆம் திகதி பெங்களூரில் ஆரம்பமாகும்'சார்க்' மாநாட்டை அடுத்து தமிழ் ஈழத்தில் அரச படைகள் பெரும் அளவு தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்று ஈ. பி ஆர். எல். எவ். தெரிவிக்கிறது.

இது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று விடுத்த அறிக்கை வருமாறு;

எதிர்வரும் 15 ம் திகதி நடக்கவுள்ள "சார்க்" மாநாட்டை அடுத்து ஈழ மக்கள் மீது விமானத் தாக்குதலுடன் கூடிய பாரிய அழிவுத் தாக்குதல் ஒன்றை அரசு ஈழப் பிரதேசத்தில் பரவலாக மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறிந்துள்ளது.

இத்தாக்குதலின் நோக்கம் அரசு முன் வைக்கும் போலித் தீர்வுகளை ஈழவிடுதலை இயக்கங்கள் ஏற்கச்செய்வதற்கு ஓர் இராணுவ நிர்ப்பந்தத்தை வழங்குவது

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

அடுத்த ஆண்டுக்கான

# இலவச பாடப் புத்தகங்கள் தாமதமின்றிக் கிடைக்க

## திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கான அடுத்த ஆண்டுக்கான இலவச பாடப் புத்தகங்களைத் தாமதமின்றிப் பெற யாழ் கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

திணைக்கள உயர்அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

தேவையான புத்தகத் தொகையை அறிவிக்கும்படி வட்டாரக்கல்வியதிகாரிகளிடம் கல்வி அமைச்சு கேட்டுள்ளது.

இவ்வருடம் புத்தகங்கள் வர ஏற்பட்ட தாமதத்தைப்போல் அடுத்த வருடமும் தாமதம் ஏற்படாதிருக்க, கொழும்பு சென்றுள்ளகல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கல்வியமைச்சுடன் பேச்சுக்களை நடத்துவார் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வருடம் சிலபாடங்களுக்கான புத்தகங்கள் வராததும் இரண்டாம் தவணை முடிந்தபின் சில புத்தகங்கள் வந்ததும் மாணவர்களையும் பெற்றோர்களையும் பெரும்கஷ்டங்களுக்குள்ளாக்கின. (இ-5)

### நல்லை ஆதினத்தில்

யாழ்ப்பாணம், நவ. 13

திருவிளையாடற் புராண படன நிறைவு விழா வருகிற திங்கள் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் அர்ச்சனைப் படலத்துடன், கலந்துரையாடல், விசேட பூஜை ஆகியன இடம் பெறும். (இ-9)

## யாழ் ஆஸ்பத்திரியில் இயங்காத "லிப்ட்"

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ் ஆஸ்பத்திரியில் உள்ள 6ஆம் வார்ட், 7ஆம் வார்ட் ஆகியவற்றுக்குச் செல்வதற்காகப் பாவிக்கப்படும் 'லிப்ட்' கடந்த பல மாதங்களாக இயங்காமல் இருக்கிறது.

இந்த வார்ட்டுக்களுக்கான நோயாளர்களைக் கைகளிலேயே தாங்கிக்கொண்டு செல்லவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 7-ம் வார்ட்டுக்கான நோயாளர்கள் அனுமதி நாளாகையால் ஏராளமான நோயாளர்களைச் சூட்டுக் காயங்களுடனும் ஷெல் தாக்குதல் காயங்களுடனும் பெரும் வேதனையுடனும்கைகளிலேயே தூக்கிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. (இ-10)


### விற்பனைக்கு

உயரமான மரங்களுக்கு நிலத்திலிருந்தபடி மருந்து தெளிக்கக்கூடிய அதிவலுவுள்ள என்ஜின் பொருத்திய தெளிகருவி விற்பனைக்குள்ளது. அலுவலக நேரங்களில் மட்டும் பார்வையிடலாம்

இல. 10,குறெசெற் ஒழுங்கை, சுண்டுக்குளி.
(கச்சேரியில் இருந்து 100 யார்)



### யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

### அறிவித்தல்

எமது தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் கால்நடை உணவுகளை விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றனர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் உணவுகளைக் களஞ்சியப்படுத்துவதற்குப் போதிய இடவசதியை ஏற்படுத்தல் வேண்டும். ஒரு தொன்னுக்கு மேலாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு 5% விற்பனைக் கழிவு வழங்கப்படும். விநியோகம் இலவசம்.

விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு 26-11-86ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

யாழ் மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு.
கோப்பாய்



## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி

● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

குவைத்திற்கு பாஸ்போட் கொடுத்தவர்கள் 15ஆம் திகதிக்கு முன் தொடர் கொள்ளவும்.

தொடர்பு:

N.பாலா

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

✱ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஓமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

✱ எமது கிளை நிறுவனம் ஓமேகா ரவல்ஸ் &ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது.


## செய்தியாளரை கொக்கா கோலா அருந்த அழைத்த சிப்பாய்கள்

மட்டக்களப்பு, நவ. 13

செய்தியாளரை அவசரப்பட்டு தாக்கிய ஆயுதப்படையினர் நடந்த சம்பவத்துக்கு தமது வருத்தத்தைத் தெரிவித்ததோடு கொக்காகோலா அருந்துவதற்கும் அழைப்பு விடுத்தனராம்.

இச்சம்பவம் அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றது. பத்திரிகை ஒன்றின் செய்தியாளர்தான் தாக்கப்பட்டவராவர்.

சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது-

அண்மையில் மாட்டுவண்டி குண்டுவெடிப்பு தினமன்று விமான நிலையத்திற்கு படைவீரர்களை எடுத்துச்செல்ல அவ்வீதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

அவ்வழியே வந்த பலரை படைவீரர்கள் தாக்கினார்கள். இதில் செய்தியாளரொருவரும் தனிமையில் சிக்கிக்கொண்டார்.

செய்தியாளர் தாக்கப்பட்டு சைக்கிள் டயர் காற்றுத் திறந்துவிடப்பட்டது. அடையாளக்கார்ட்டைக் கேட்டனர். செய்தியாளர் சமர்ப்பித்தார்.

அடையாளக் கார்ட்டைப் பார்வையிட்ட பின்பு தடுத்துவைக்கப்பட்ட செய்தியாளர் விடுவிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நடைபெற்று ஒரு வாரத்தின் பின்பு சந்தையில் பொருள்களைக் கொள்வனவு செய்துகொண்டிருக்கையில் அப் படைவீரர் செய்தியாளரைக் கண்டு ஓடி வந்தார்.

செய்தியாளரா? என சிங்களத்தில் கேட்டுவிட்டு அன்றைய சம்பவத்தை நினைவுபடுத்தினார்.

அன்றைய நாள் அவசரப்பட்டு விட்டேன். செய்தியாளர் என அறிமுகப்படுத்தியிருந்தால் பிரச்சினை இல்லைதானே, என்றார்.

'வாரும் கொக்கா கோலா குடிப்போம்' எனவும் சிப்பாய் அழைப் புவிடுத்தார். (இ-11)

## இங்ஸ்லி சுவாம்பிள்ளை ஒரு முஸ்லிமா? சிப்பாயின் கேள்வி இது

மட்டக்களப்பு, நவ. 13

மட்டக்களப்பு திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை முஸ்லிமா?

மேற்கண்ட கேள்வியை மட்டக்களப்பு—கொழும்பு வீதியிலுள்ள மன்னம்பிட்டி பாலம் அருகில் சோதனையிடும் சிப்பாய்களில் ஒருவர் ஆயரின் சாரதியிடம் கேட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது:-

ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து, பதில் அரச அதிபர் திரு. எம். செல்வரெத்தினம் ஆகியோர் கொழும்பு சென்று காரில் திரும்பிக்கொண்டிருந்தனர்.

மன்னம்பிட்டியில் சோதனையில் ஈடுபட்டிருந்த சிப்பாய்கள் அடையாள கார்ட்டுகளை பார்வையிட்டனர்.

கார் சோதனையிடுவதற்காக சாரதி டிக்கியைத் திறந்துவிட்டார்.

அந்நேரம் சிப்பாய்களில் ஒருவர் இடுப்பில் சிவப்புப்பட்டி அணிந்திருப்பவர் முஸ்லிம் ஆளா? என சிங்களத்தில் விசாரித்தாராம். இல்லை கிறிஸ்தவ மதகுருமாருக்கு பெரிய மத குரு என பிக்குமாருடன் ஒப்பிட்டு சாரதி விளக்கினாராம். (இ-21)

## அச்சுவேலி சந்தையும் ப. நோ. கூ. சங்கமும் புலிகள் கட்டுப்பாட்டில்

பலாலி, நவ. 13

அச்சுவேலியில் பொதுச் சந்தையும், வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன என்று பெயர்ப் பலகை மூலம் எழுதித் தொங்க விடப்பட்டுள்ளது

சந்தையில் உற்பத்தியாளர்களையும், வியாபாரிகளையும் சுரண்டும் இடைத் தரகர்களின் தொல்லையை நீக்கி பொது மக்களுக்கு நியாயமான விலையிலும், உற்பத்தியளர்களுக்கு போதிய வருமானமும் கிடைக்கச் செய்வதற்கே சந்தை புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ்க்

(4ஆம் பக்கம் பார்க்க)

### இலவசம்

யாழ்ப்பாணம், நவ. 13

திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைபுத்தகம் மில்க்வைற் ஸ்தாபனத்தாரால், ஆலயங்களுக்கும் சமூக, சமய நிலையங்களுக்கும் இலவசமாக விநியோகிக்கப் படுகின்றன.

நேரில் விண்ணப்பித்தோ, தபால் முத்திரைகளை அனுப்பியோ பெற்றுப் பயனடையலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## 17 வருட அனுபவத்தில் 4 ஆம் மாடியில் எவராவது தாக்கப்பட்டதை காணவில்லையாம்

கொழும்பு, நவ, 13

இரகசியப் பொலீஸ் பிரிவில் நான்கடமையாற்றிய 17 ஆண்டு காலங்களில் நான்காவது மாடியில் வைத்து ஒரு சந்தேக நபர் தானும் பொலீஸாரால் தாக்கப்பட்டதை காணவில்லை சி. ஐ. டி சப் இன்ஸ்பெக்டர் காமினி பள்ளியகுரு, ஹென்றி பெரெரா மீதான வழக்கில் சாட்சியமளிக்கையில் மேற்கண்ட வாறு சொன்னார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் லெனின் என்றழைக்கப்படும் ஹென்றி பெரெரா மீது இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (இ-எ)

## கட்டடங்களைத் திருத்த ரூ 3 லட்சம்

யாழ்ப்பாணம். நவ. 13

யாழ் கல்வித் திணைக்கள கட்டடங்கள் திருத்தவென 3லட்சம் ரூபாவை கல்வியமைச்சு திணைக்களத்துக்கு வழங்கியுள்ளது.

திணைக்கள அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய கட்டடங்கள் கட்ட கல்வித்திணைக்களத்திற்கு அமைச்சு அனுமதியளிக்க மறுக்கின்றது என்றும் அவர் சொன்னார். (இ-5)

## விளையாட்டரங்கு

### சென் ஹென்றீஸ் வெற்றி!

இளவாலை, நவ. 13

இளவாலை விளையாட்டரங்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் சென். ஹென்றீஸ் கல்லூரிக்கும் இடையே நடந்த சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் சென் ஹென்றீஸ்வென்றது.

கப்டன் பார்த்திபனும், கோல் காப்பாளர் ராஜ்குமாரும் முன்னணி பின்னணி வீரர்களாக நின்று சிறப்பாக ஆடினர் சென். ஹென்றீஸ் அணியில் பெஞ்சமின், சேவியர் இருவரும் சளைக்காது ஆடி கோல்கள் போட்டனர்.

ஈற்றில் 4 - 0 கோல்களை ஈட்டி சென். ஹென்றீஸ் மகத்தான வெற்றி ஈட்டியது. திரு. ரி. ராஜேந்திரா நடுவராகக் கடமையாற்றினர்.

2 ஆவது பிரிவிலும் நல்லபோட்டியும் நெருக்கமான மோதலும் இடம் பெற்றன;

3 - 2 கோல்களால் சென். ஹென்றீஸ் வென்றது. திரு. தி. கைலைநாதன் மத்தியஸ்தராக நின்றார்.

3 ஆவது பிரிவில் தலா 1-1 கோல்கள் போட்டு சமமாக ஆட்டம் முடிந்தது.

திரு. எஸ்.வீ. விக்கிரமசிங்கம் நடுவராகக் கடமையாற்றினர். (இ-48)

## தீமையை வெறுத்து நன்மையை பற்றுங்கள்

### தியான வைபவத்தில் அருளுரை

இளவாலை. நவ. 13

தீமையை வெறுத்து நன்மையையே பற்றிக் கொண்டிருங்கள்.

அருள் திரு. ரீ. பற்றிக் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டத்தரிப்பு புனித பத்திமா ஆலயத்தில் இளவாலை கியூறியாவைச் சேர்ந்த இளவாலை மறைமாவட்ட மரியாயின் கத்தோலிக்க சேவா சங்கத்தார் ஒரு நாள் தியானம் அனுஷ்டித்தனர்.

பல அருள் உரைகள் வழங்கப்பட்டன. அருள் திரு. ரீ பற்றிக் அடிகள் தொடர்ந்து பேசுகையில் உங்கள் அன்பு களங்கமற்றதாக இருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையையே பற்றிக் கொண்டிருங்கள் என்றார்.

அருள் திரு. இருதயராஜ் தமது உரையில், "தொண்டர்களாகிய நீங்கள் இறைவிசுவாசம் மிக்கவர்களாக வாழவேண்டும். விருந்தோம்பல், நன்மையில் நாட்டம், விவேகம், நீதி, புனிதம், தன்னடக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து நற்படிப்பினைகளை உறுதியாகப் பற்றிக்கொள்பவராய் சேவையில் இறங்கவேண்டும்" என்றார். (இ-48)

### கல்வி மலர்

கரவெட்டி, நவ. 13

கோப்பாய் கல்வி வட்டாரப் பகுதியில் இரு பகுதிகளைக் கொண்ட கல்விமலர் ஒன்றை வெளியிட இருப்பதாக கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா குறிப்பிட்டார்.

முதலாம் பகுதியில் கோப்பாய் வட்டாரத்தில் உள்ள 53 பாடசாலைகள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, வெளிக்களக்திணைக்களம் ஆகியன பற்றி சுருக்கமான வரலாறு இடம் பெறும்.

இரண்டாம் பகுதியில் கோப்பாய் பகுதி கல்விக்கானராவ்பகதூர்சி.வை. தாமோதரம்பிள்ளை, வித்துவான் கணேசையர், சபாபதி நாவலர் போன்றோரின் பங்களிப்பும் மற்றும் பவவிடயங்களும் இடம் பெறும். (இ - 70)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

விஜிதரன் விவகாரம்:

## மனித உரிமைக்காகப் போராடுவதில் அர்த்தம் இல்லை

### வெகுஜன இயக்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ் பல்கலைக் கழகத்தின் மூன்றும் வருட மாணவன் அ. விஜிதரன் மர்மமான முறையில் காணமல்போய் உள்ள சம்பவம் மிகவும் அதிர்ச்சிக்குரியதும் விசனிக்கத் தக்கதுமாகும். சகலவிடுதலை இயக்கங்களும் பொது ஸ்தாபனங்களும் இவ்விவகாரத்தில் தாமதமின்றித் தலையிட்டுகாணமற்போன அம்மாணவனைக் கண்டுபிடித்து பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ஒப்படைக்க முன்வரல்வேண்டும். இல்லாவிடில் தமிழ் மக்கள் அரசின் மனிதஉரிமை மீறல்களுக்கு எதிராகப் போரிடுவதிலோ அல்லது வெளி உலகத்துக்கு அதை அம்பலப்படுத்துவதிலோ அர்த்தம் எதுவும் இருக்க முடியாது.

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் பல்கலைக் கழக மாணவன் காணமற்போனதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வெகுஜன இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சோ. தேவராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

காணமல் போயுள்ள பல்கலைக்கழக மாணவனைக் கண்டு பிடித்துத் தரும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோள் இது வரை நிறைவேற்றப்படவில்லை.

இதனால் அம்மாணவன் திட்டமிட்ட கடத்தலுக்கு உள்ளாகி இருக்கலாம் என்றே நம்பப்படுகிறது.

அது உண்மையாக இருக்குமானால் தமிழ்மக்கள் அனைவருமே வெட்கித் தலைகுனியக் கூடிய அபகீர்த்திக்குள்ளானசம்பவம் என்றே கூறவேண்டும்.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு மாணவன் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் தனது பல்கலைக் கழகக் கல்வியைத் தொடரமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகி இருப்பதை தமிழ் மக்களைப் பிளவுபடுத்த முயலும் பேரினவாத ஆட்சியினருக்கு வழங்கப்பட்டிருக்கும் வாய்ப்பாகவே கொள்ளமுடியும்.

அநீதிக்கு எதிராகவும் நீதிக்காகவும் போராடி வரும் தமிழ் மக்கள் தங்கள் மத்தியில் மனித உரிமைகளைத் தூசாக மதித்து நடத்தப்படும் இதுபோன்ற சம்பவங்களை அனுமதிக்கக் கூடாது.

நீதிக்காகக் கோரி [illegible] யாழ் பல்கலைக் கழக மாணவர்களுக்கு சகல மக்களும் ஆதரவு வழங்க வேண்டுமென எமது மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

## விஜிதரனை விடுவிக்குமாறு கிராமியத் தொழிலாளர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.13

யாழ் பல்கலைக் கழக 3ஆம் வருட மாணவன் அ. விஜிதரனை எதுவித நிபந்தனையுமின்றி விடுதலைசெய்யுமாறு கிராமியத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் திரு. ப. கிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாகஅவர் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது:

இச்சம்பவம் யாழ் பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு கறைபடிந்த சம்பவமாகும்.

ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் வேண்டாம், அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், மாணவர்கள் மீதான மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)


### யாழ். வாழ் முஸ்லிம் மக்களுக்கோர் நற்செய்தி!

திரு. நளீம் ஹாஜியாரின் இலங்கையிலே மிகப்பெரிய கோழிப் பண்ணையான Bairaha Farms இல், விஞ்ஞான முறைப்படி, மிருகவைத்தியர்களின் ஆலோசனைக்கிணங்க வளர்க்கப்பட்டு இஸ்லாமிய மதக் கோட்பாடுகளுக்கமைய (HALAL—ஹலால்) சுகாதார முறைப்படி தயார் படுத்தப்பட்ட சுவைமிக்க கோழி இறைச்சி!!

"BAIRAHA FARM BROILERS"
[(B) பைரா (F) பாம் புரொய்லர் கோழி இறைச்சி]
1 kg. 62—50

குறிப்பு:

✱ பொருட்கள் கொழும்பிலிருந்து குளிரூட்டப்பட்ட வாகனத்தில் (FREEZER TRUCK) தருவிக்கப்பட்டு, இங்கு குளிரூட்டிய அறையில் (COLD ROOM) சேமித்து வைக்கப்பட்டுள்ளது.
—எம்மிடம் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்,

✱ மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

வடமாகாண விநியோகஸ்தர்:-

The Medical Hall மெடிக்கல் ஹோல்

No. 224, Hospital Road,
JAFFNA.
Phone: 22575

இல. 224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22575


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

எல்லாக் காரியங்களையும் இறைவனே செய்கிறான் என்பது உண்மையே. ஆனால் அதை உணர்பவர் வெகு சிலரே. இந்த உண்மையை உணர்பவர்கள் வாழ்வில் உயர் நிலை அடைவர்.

—அன்னை சாரதாதேவி.

உதயன்

உண்மை - நடுநிலைமை - ...

இல. 15, 2வது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம். 13-11-1986 த. பெ. இல. 23

## நம்பிக்கைத் துரோகம் வேண்டாம் இந்தியாவே!

நாளுக்கு ஒரு கோலமும் வேளைக்கு ஒரு வேஷமும் போடும் சர்வதேசப் போட்டி ஒன்று வைத்தால் அதில் யார் வெல்வார்?

உங்களால் சொல்ல முடியுமா? எங்களால் நிச்சயம் கூற முடியும். அதற்குச் சரியான பதில்: ஸ்ரீலங்கா நாட்டின் தர்மிஷ்ட அரசாங்கம் தான் அப்படி ஒரு போட்டியில் நிச்சயமாக முதலிடம் பெறும். அதனை வெல்வதற்கு வேறு எந்த நாட்டு அரசாங்கத்தாலும் முடியாது; முடியாது!

யாழ்ப்பாணத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளிடம் யுத்தக் கைதிகளாக இருக்கும் இரண்டு சிப்பாய்களை மீட்பதற்கான சமாதானப் பேச்சு கடந்த ஞாயிற்றுக்கிழமை தான் நடந்தது.

பரம எதிரிகளான இராணுவத்தினரும் புலிகளும், நிராயுதபாணிகளாக நட்புறவான சூழ்நிலையில் பேச்சு நடத்தினார்கள். சிப்பாய்களை விடுவிக்கப் புலிகள் விதித்த நிபந்தனையை அரசாங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட யாழ். கோட்டை இராணுவ உயர் அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர்.

அரசாங்கத்தின் அனுமதியின்றி, பூரண விருப்பமின்றி இராணுவ அதிகாரிகள் யாழ்ப்பாண நகரத்துக்குள் வந்து பேச்சு நடத்தியிருக்க முடியாது.

நிபந்தனைகளை அரசு ஏற்றுக் கொண்டதால் கைதிகள் பரிமாற்றம் நடக்கும் என்று எதிர்பார்த்திருந்த வேளை...

வடமராட்சியில் ஆயுதப்படையினர் மும்முனைத் தாக்குதலில் ஈடுபட்டு மக்களுக்கு அழிவை ஏற்படுத்தியிருக்கிறார்கள்; அவர்களின் உடைமைகளுக்குச் சேதம் விளைவித்திருக்கிறார்கள். வல்லையில் புதிதாக இராணுவ முகாம் அமைக்கவும் அவர்கள் முயன்றிருக்கிறார்கள். நாவற்குழி, கோட்டை முகாம்களில் இருந்தும் ஆத்திரமூட்டல் எதுவும் இல்லாமலே தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள்.

ஆனால் எமது போராளிகள் அவற்றை முறியடித்துவிட்டார்கள். வடமராட்சித் தாக்குதலுக்கும் பதிலடி கொடுத்திருக்கிறார்கள்.

முதல் நாள் நட்புறவுடன் பேச்சு. அடுத்த நாள் இன அழிப்பு முயற்சி இதன் அர்த்தம் என்ன...? இது எதில் போய் முடியும்? இப்படியானால் இனப்பிரச்சினை எப்போது, எப்படித் தீரும்.

பாதுகாப்புச் செலவீனம் வானை முட்டும் போது நான் எப்படிச் சந்தோஷமான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க முடியும் என்று நிதி அமைச்சர் நுனி மூக்கால் அழுகிறார்.

ஆனால் அரசாங்கம் இராணுவ நடவடிக்கை தான் தனது முழு உயிரும் என்ற தோரணையில் செயற்படுகிறது. சமாதானம், சமாதானம் என்று பேசிப்பேசி சண்டை செய்யும் தந்திரத்தை அது தொடர்ந்து செயலில் காட்டி வருகிறது,

உலக நாடுகளிடம் கடன் பெறும் வேளையில் சமாதானம் பேசுவதும் அந்தக் காரியம் தனக்குச் சாதகம் ஆகியதும் ''சண்டித்தனம்'' புரிவதும் தர்மிஷ்டக் கும்பலுக்குக் கைவந்த கலை. தர்மிஷ்ட நெறியில் இராணுவ நடவடிக்கைக்கு விலக்கில்லை என்று வியாக்கியானம் வேறு.

ஸ்ரீலங்காத் தர்மிஷ்டத்தின் தாற்பரியம் தனக்கும் புரிந்திருப்பதாக இந்தியாவும் சிறிது காலத்திற்கு முன்பு வெளிப்படையாகத் தெரிவித்தது. ஹராரே மாநாட்டில் பிரதமர் ராஜீவும் அது குறித்துச் சூடேறக் கொடுத்திருந்தார்.

சமாதானப் பேச்சிலிருந்து விலகிக் கொள்வதாக ஸ்ரீலங்கா இன்னும் அறிவிக்கவில்லை. இந்த வாரத்தில் இனப்பிரச்சினை சம்பந்தமாக ராஜீவ் - ஜே. ஆர். உச்சிப் பேச்சு நடக்கப் போகிறது.

அப்படியானால் சமாதானப் பேச்சு முடியும் வரை இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று இந்தியா உறைப்பாகக் கூறாமல் இருப்பதேன்? இராணுவ நடவடிக்கை செயல் ரீதியில் நிறுத்துமாறு நிர்ப்பந்திக்காது இருப்பது ஏன்? இதனைச் ஸ்ரீலங்காவிடம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறுவதற்கு இந்தியா பின்னிற்பதேன்?

தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா சம்பந்தப்பட்டுவிட்டது. ஆகையால் சமரசம் செய்து வைப்பதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் பொறுப்பு அதனையே சார்ந்துள்ளது.

தமிழ்ப் போராளிகளைக் கைது செய்யவும் விசாரிக்கவும் இருக்கும் துணிவு, சமாதானம் காணும்வரை இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்திப்பதற்கு இல்லாமற் போனது ஏன்?

தமிழர்கள் தங்கள் நாட்டில் அகதிகளாக தஞ்சம் புகுந்தவர்கள் என்பதால், அவர்களை மிரட்டி அவர்களுக்கு விருப்பமில்லாத தீர்வை திணிக்க இந்தியா நினைக்கிறதா?

புண்ணிய பூமி, தர்ம உலகம் என்றும், தமது சிற்றன்னை நாடு என்றும் தமிழர்கள் பெரிதாக நினைக்கும் இந்தியா, ஈழத் தமிழர்களை ஏமாற்ற நினைத்தால் அல்லது அவர்கள் மீது குதிரைவிட நினைத்தால் அது பெரும் துரோகமாக முடியும்.

# தமிழ்ப் போராளிகளை கைது செய்ததற்கு கடும் கண்டனம்

## இந்திய நாடாளுமன்றத்தில்

புதுடில்லி, நவ. 12

தமிழ்ப் போராளிகளைக் கைதுசெய்த செயலில் ஈடுபட்டதற்கு தமிழ்நாடு அரசாங்கத்தை தெலுங்கு தேசம் கட்சி கண்டித்துள்ளது.

புதுடில்லி நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த இலங்கை இனப்பிரச்சினை பற்றிய விசேட விவாதத்தைத் தொடக்கிவைத்துப் பேசுகையில் தெலுங்குதேசம் கட்சி எம். பியான திரு. ஸ்ரீஇராமமூர்த்தி மேற்கண்ட கண்டனத்தை வெளியிட்டார்,

இணை அமைச்சர் நட்வர்சிங் இதற்குப் பதிலளிக்கையில் சொன்னதாவது:-

தமிழ்ப் போராளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை. கடுமையாக நடத்தப்படவில்லை. பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டபின்னர் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் இடம் பெற்ற சில வன்செயல்கள் தொடர்பாக போராளிகள் சிலர்கைது செய்யப்பட்டனர்,

இலங்கைக்கு அமெரிக்கராணுவஉதவி வழங்கப்படும் செய்தி சம்பந்தமாக வாஷிங்டனின் கவனத்தை இந்தியா ஈர்த்துள்ளது.

இப்படி இணை அமைச்சர் சொன்னார்.

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ்ப் போராளிகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை இலங்கைத் தமிழருக்கு பெரிய அளவில் உதவும் என்று ஆளும்கட்சி எதிர்க்கட்சி எம். பிக்கள் சிலர்சொன்னார்கள். (அ-எ)

## தமிழ் நாடு சட்டசபை கூட்டத் தொடர்

சென்னை, நவ. 12

தமிழ் நாடு சட்டசபையின் குளிர்காலக் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமானது.

இரண்டு வாரங்களுக்கு இத்தொடர் நீடிக்கும். (இ-எ)

## அ. தி. மு. கவுடன் 'நமது கழகம்' இணைவு

சென்னை, நவ. 12

திரு எஸ். டி. சோமசுந்தரம் தலைமையிலான 'நமது கழகம்' கட்சி தமிழக முதல் அமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் முன்னிலையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து கொண்டது.

1978 முதல் 1984 வரை திரு. சோமசுந்தரம் அ. தி. மு. க அமைச்சராகப் பணியாற்றினார்.

கருத்து வேற்றுமை காரணமாக அ. தி. மு. கவை விட்டு விலகிய திரு சோமசுந்தரம் 'நமது கழகம்' என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை தொடங்கினார். (இ-எ)

## குடியரசுக் கட்சி தோல்வி குறித்து 'பிராவ்தா' கருத்து

மாஸ்கோ, நவ. 12

அமெரிக்க மக்கள் அதிபர் றேகனின் நட்சத்திரப் போர்த் திட்டத்துக்கு ஆதரவு இல்லை என்பதையே செனட், காங்கிரஸ் தேர்தல்களில் குடியரசுக்கட்சி தோல்வி அடைந்த சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

இப்படி ரஷ்யாவின் உத்தியோகபூர்வ பத்திரிகை 'பிராவ்தா' சுட்டிக் காட்டியுள்ளது.

ஐஸ்லாந்தில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் ரஷ்யாவின் கோரிக்கைகளை அதிபர் றேகன் நிராகரித்ததை அமெரிக்க மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் அண்மைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இப்படி மேலும் 'பிராவ்தா' கூறியிருக்கிறது. (அ-எ)

## இன மோதல்: விசாரிக்க கமிஷன்

கராச்சி, நவ. 12

தென் பாகிஸ்தானில் இடம்பெற்ற இன மோதல்களை விசாரிக்க மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரை பாகிஸ்தான் அரசு நியமித்திருக்கிறது.

பதன் இனத்தவர்களுக்கும் முஹஜிர் இனத்தவர்களுக்கும் இடையே நடந்த இந்த மோதலில் 55 பேர் கொல்லப்பட்டனர். இம் மோதல்கள் 9 தினங்கள் நீடித்தன. (இ-எ)

## படகுப்பாதை கவிழ்ந்து 180 பயணிகள் பலி

ஹெய்த்தி, நவ, 12

கரிபியன் தீவுக்கடலில் படகுப்பாதை ஒன்று கவிழ்ந்ததில் சுமார் 180 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹெய்த்தியில் இருந்து 30 மைல் தொலைவில் இவ்விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப் பட்டது.

20 பயணிகளே உயிருடன் மீட்கப்பட்டதாக ஹெய்த்தியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்திருக்கின்றது.

இவ்விபத்து கடந்த செவ்வாய் இரவு இடம் பெற்றதாக அறிவிக்கப் பட்டது. (எ)

## வெளி உலகில்

## சட்டவிரோதமாகக் குடியேறியவர்களுக்கு அமெரிக்கா மன்னிப்பு

லொஸ்எஞ்சல்ஸ், நவ. 12

1982 இல் இருந்து தொடர்ச்சியாக அமெரிக்காவில் வசித்து வரும் சட்டவிரோதமாக குடியேறிய வெளிநாட்டுப் பிரசைகளுக்குமன்னிப்பு வழங்கும் திட்டம் ஒன்றை அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

இதற்கான சட்டத்தில் அமெரிக்க அதிபர் றேகன் கடந்த வாரம் கைச்சாத்திட்டார்.

மன்னிப்பு வழங்கப்பட்டதில் இருந்து அடுத்த பதினெட்டு மாதங்கள் கழித்து அவர்கள் அனைவரும் நிரந்தர வாசிகளாக கணிக்கப்படுவர் என்று புதிய சட்டத்தில் தெரிவிக்கிப்படுகிறது.

சட்ட விரோதமாகக் குடியேறியோர் அமெரிக்காவில் எவ்வளவு பேர் வாழ்கின்றார்கள் என்பது ஒருவருக்கும் தெரியாது.

ஆனால் இவர்கள் 30 லட்சத்தில் இருந்து ஒரு கோடி 20 லட்சத்துக்கு இடையில் இருக்கும் என்று மதிப்பிடப் படுகிறது. (அ-எ)

## திமிங்கில வேட்டை

ஒட்டாவா, நவ. 12

திமிங்கில வேட்டைக்கு எதிராக இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஐஸ்லாந்து கடலில் திமிங்கில வேட்டையில் ஈடுபட்டிருந்த இரு கப்பல்கள் இயக்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டன என்று இபக்கத் தலைவர் போல் வாட்ஸன் தெரிவித்தார். (இ-எ)

## ஆளும்கட்சி வெற்றி

ஹம்பர்க், நவ. 12

மேற்கு ஜேர்மன் மாநிலமான ஹம்பர்க் சட்டசபைத் தேர்தலில் சமூக ஜனநாயக் கட்சி மோசமான தோல்வி கண்டது,

மேற்கு ஜேர்மன் ஆளும் கட்சியான கிறிஸ்தவ ஜனநாயக கட்சி, மாநில அதிகாரத்தைக் கைப்பற்றியது.

தேசியத் தேர்தல்கள் 1987 ஜனவரி 25 இல் இடம் பெற இருக்கின்றது.

இச்சமயத்தில் ஹம்பர்க் தோல்வி பெருத்த அதிர்ச்சியைத் தந்ததாக சமூக ஜனநாயகத் கட்சித்தலைவரும் மேற்கு ஜேர்மனியின் முன்னாள் அதிபருமான வில்லி பிராண்ட் தெரிவித்தார். (அ-எ)

## 1972இன் அரசமைப்பா ஆயுதம் தூக்க வைத்தது?

### இல்லை என்கிறார் கொல்வின்

கொழும்பு, நவ. 13

1972 இல் கொண்டு வரப்பட்ட அரசமைப்புச் சட்டம் தான் இலங்கை அரசுக்கு எதிராக தன்னை ஆயுதம் தூக்க வைத்தது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் கூறியது தவறு.

இப்படி 1971 அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய முன்னாள் அரசியல் விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா சொன்னார்.

கொழும்பு, கார்ல் மார்க்ஸ் தொழிலாளர் பாடசாலையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மேலும் சொன்னதாவது:

1972 அரசமைப்புச் சட்டத்தில், சோல்பரி அரசமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்கிய 29 ஆவது ஷரத்து சேர்க்கப்படவில்லை என்று பிரபாகரன் கூறியிருக்கிறார்.

அந்த ஷரத்து அமுலில் இருந்த காலத்தில் சரியான முறையில் அமுல் நடத்தப்படவில்லை ஆனால் 1972 அரசமைப்புச் சட்டத்தில் பிரிக்க முடியாதபடி அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டிருந்தன.

நாம் ஆட்சியில் இருந்த காலத்திலும் மனித உரிமை மீறல்கள் இருக்கத்தான் செய்தன.

அவற்றை எதிர்த்து நீதிமன்றம் போகும் துணிவு அன்றையஐக்கிய தேசியக் கட்சியினருக்கு இருக்கவில்லை. அப்படி சென்றிருந்தால் வெற்றியீட்டி இருக்க முடியும்.

1972 அரசமைப்புச் சட்டம் நாட்டை மதசார்பற்ற நாடாகக் காட்டவில்லை என்று புலிகள் தலைவர் பிரபாகரன் குற்றஞ் சாட்டுகின்றார்.

மத சார்மற்ற நாடாகத்தான் 1972 அரசமைப்புச் சட்டம் காட்டியது இருந்தும் புத்த மதத்துக்கு ஏனைய மதங்களிலும் பார்க்க முன்னுரிமை வழங்கப்பட்டது மட்டும் தான் ஒரு குறையாக இருந்தது.

இப்படி டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா சொன்னார். (இ-எ)

## சமய சந்திகளில்

### தீட்சை வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், நவ. 13

எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயிலில் சைவசமய தீட்சை வழங்கும் வைபவம் இடம்பெறும்.

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது. (இ-எ)

## வாசகர் திருமுகம்

### அச்சுவேலியில் நிறை குறைந்த பாண்

அச்சுவேலி நகரப் பகுதிகளில் உள்ள கடைகளில் மிகவும் குறைந்த நிறையில் பாண் விற்பனை செய்யப்படுகிறது.

எம் இனத்துக்கு எம் இனமே செய்யும் துரோகச் செயல் இது ஆகும்.

பேக்கரி உரிமையாளர்கள் ஒரு இறாத்தலுக்குரிய பணம் பெறும் அதே வேளையில் ஒரு இறாத்தலுக்குக் குறைவான நிறையுள்ள பாணையே விற்பனைக்கு விடுகின்றனர்.

சிவில் நிர்வாகம் இல்லாத இவ்வேளையில் இதை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு இச்செயல்களை புரிகின்றனர்:

குடா நாட்டில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தி வரும் விடுதலை அமைப்புக்கள் இதில் கவனம் செலுத்தி மக்களுக்கு சரியான நிறையுள்ள பாணை விற்பனை செய்ய முயற்சிக்க வேண்டும்.

கடைக்காரர்களோ தமக்கு பாணுக்கு பணம் தந்தால் சரி என்ற நிலையில் உள்ளனர். தாம் கடையில் விற்பனை செய்ய வாங்கும் பாண் சரியான நிறையுள்ளதா என்பதுபற்றி சிறிதும் சிந்திப்பதில்லை.


நீதி நியாயத்துடன் சம்பாதிக்க பேக்கரி உரிமையாளர்கள் முயற்சிக்க வேண்டும்.

இதை விடுத்து நீதி அற்ற முறையில் நடக்கக் கூடாது இதனைப் ... சிந்தித்து செயல்படுவார்களா?

ஜெயக்காந்தன்

பத்தமேனி

## பொய்யாமொழி



**குறள்:**

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**பொருள்:**

சினம் என்னும் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பு, ஒருவனுக்கு இனம் என்னும் இன்பத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

## கல்வித்துறையில் கனகரத்தினம் ஆற்றிய அரும்பணி

### இன்று நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பும்

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் இன்று காலை 9.30 மணியளவில் நடைபெறுகின்றன.

மு. இராமலிங்கம்
அதிபர்

கடந்த நூற்றாண்டில் பிறந்த தமிழ்ப் பெருந்தலைவர்களுள் அமரர் ஆறுமுகம் கனகரத்தினமும் ஒருவர் என்பதை நாட்டின் சரித்திரம் தெரிந்தவர்கள் மட்டுமே அறிவர்.

கலாநிதி ஆனந்த குமாரசுவாமி, சேர் பொன். இராமநாதன் சகோதரர்கள் முதலானோரை உலகம் தெரிந்து கொண்ட அளவு அமரர் கனகரத்தினம் அவர்களைத் தெரிந்துகொள்ளவில்லை.

இதற்கான முக்கிய காரணம் முன் குறிப்பிடப்பட்டவர்களுக்கிருந்த கொழும்புச் செல்வாக்கு கனகரத்தினம் அவர்களுக்கு இல்லாதிருந்ததே.

அமரர் கனகரத்தினம் அவர்கள் ஆற்றிய தன்னலமற்ற சேவையின் சின்னமாக விளங்குவது அன்று ஸ்ரான்லி அரசினர் மத்திய கல்லூரி என்றும் இன்று கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் என்றும் அழைக்கப்படும் பாரிய கல்வி ஸ்தாபனமே.

தென்னிலங்கையில் அரசாங்க பாடசாலைகள் வளர்ச்சி பெற்றிருந்த காலத்தில் வடக்கில் சமய சார்பான தனியார் கல்லூரிகளே இருந்தன.

ஏழை மக்களின் குழந்தைகள் உயர்கல்வி கற்க வசதியற்ற நிலையில் 1928 இல் அமரர் திரு. கனகரத்தினம் அவர்களின் அயரா முயற்சியினால் நிறுவப்பட்டதே ஸ்ரான்லிக் கல்லூரி அன்றைய ஆங்கிலேய தேசாதிபதியிடம் தமக்கிருந்த செல்வாக்கினால் ஹேபேட் ஸ்ரான்லி என்ற தேசாதிபதியை அழைத்து வந்து பாடசாலையைத் திறந்து வைத்ததோடு அதற்கான நன்றிக் கடனாக அவரது நாமத்தையே பாடசாலைக்குச் சூட்டினார்.

யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இருபகுதிக்கும் ஏக காலத்தில் மக்களால் தெரிவு செய்யப் பட்ட சட்டநிருபண

(4ஆம் பக்கம் பார்க்க)

## ரொபர்ட் புரூஸ் போன்று நடக்க வேண்டுமாம் மாணவர் மத்தியில் அத்துலத்

கொழும்பு, நவ. 13

ரொபர்ட் புரூஸ் போன்று தோல்விகளைக் கண்டு மனம் துவளக் கூடாது. எடுத்த காரியத்தை நாம் கைவிடக் கூடாது.

இப்படிச் சொன்னார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி.

வெள்ளவாயா என்னும் இடத்தில் நடந்த மாணவர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் மேலும் சொன்னதாவது;

பாக்கு நீரிணையில் கடற்படை ரோந்துப் பணியை அதிகரிக்க உள்ளது.

இதன் மூலம் ஆயுதக் கடத்தலை நாம் முடிவுக்குக் கொண்டு வருவோம் தோல்வியில் எமக்குப் பங்கு உண்டு. அதுபோல் மேலும் மேலும் வெற்றியை அடைய முயற்சிக்க வேண்டும்.

எமது போராட்டம் முடிவுக்கு வர நீண்ட நாள் எடுக்கும். இது குறித்து நாம்மனம் சலிக்கக் கூடாது ரொபர்ட் புரூஸ், வின்ஸ்டன் சர்ச்சில் போன்று விடாமுயற்சியுடன் ஈடு படவேண்டும்.

இப்படி அமைச்சர் சொன்னார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.C.E. A/L 87, 88
கலை, வர்த்தகம்
புதிய வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.
கெயின்ஸ் கல்வி நிலையம்
நெல்லியடி.

உதயன்

13 - 11 - 1986 வியாழக்கிழமை

குறியீட்டு அளவையியல்
1987 & 88
ஆரம்பம்: 13 - 11 - 86
வியாழன் பி.ப. 2-00 மணி
ஆசிரியர்: கேசவன்
கெயின்ஸ் நெல்லியடி.

## ★ இன்று புதசந்தரணம்

யாழ்ப்பாணம், நவ. 13
இன்று காலை 7-14 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் புதசந்தரணம் நடைபெறும் என்று யாழ் வானியற் கழகத் தலைவர் திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் தெரிவித்தார்.

புதன்கிரகம் சூரியனைச் சுற்றி வரும்போது சில வேளைகளில் பூமியும், சூரியனும், புதனும் ஒரே நேர்கோட்டில் அமையும். அப்போது புதனானது சூரிய வட்டத்துக்குக் குறுக்காக ஒரு கரும் புள்ளியாக ஊர்ந்து செல்லும்.

இந்நிகழ்ச்சியையே புதசந்தரணம் (Transit of Mercury) என்று அழைப்பர்.

இதனைப்பார்க்க விரும்புவோர் தொலைநோக்கியின்மூலம் சூரியனின் விம்பத்தை ஒரு வெள்ளைத்தாளில் விழுத்தி அதையே பார்க்கவேண்டும்.

தொலைநோக்கியால் சூரியனை நேராகப் பார்ப்பது கண்ணுக்கு மிகவும் கெடுதலை விளைவிக்கும் என்று அவர் தெரிவித்தார். (இ.5)

## ரூ. 500 செலுத்தினால் 6 மணித்தியாலத்தில் பாஸ்போர்ட்

கொழும்பு, நவ 13
முத்திரைக் கட்டணமாக 500 ரூபா செலுத்தினால் ஆறு மணித்தியாலங்களில் ஒருவர் பாஸ்போர்ட்டைப் பெற்றுக் கொள்ளக்கூடியதான திட்டம் ஒன்றை குடியகல்வு, குடிவரவுத் திணைக்களம் அறிமுகப்படுத்த உள்ளது.

இப்புதிய திட்டத்தின் கீழ், இரண்டு தினங்களுக்குள் பாஸ்போர்ட் பெற 400ரூபா, மூன்று தினங்களுக்குள் பெற 330 ரூபா, 4 தினங்களுக்குள் பெற 250 ரூபா முத்திரைக் கட்டணம் செலுத்தப்படவேண்டும்.

தற்போது 200ரூபாவே முத்திரைக் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது ஒருவாரத்தினுள் பாஸ்போர்ட் வழங்க முயற்சிக்கிறது

புதிய திட்டம் ஊழல் நடவடிக்கைகளை ஒழிக்கும் என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பாஸ்போர்ட் பெற ஒருவர், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தேசிய அடையாளக்கார்ட், மாதவருமானத்தை நிரூபிக்கும் அத்தாட்சி ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும். இப்படி திணைக்களம் கூறுகிறது. (இ-எ)

## 'சார்க்' மாநாட்டின்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
ஆகும்.

தற்போது மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதல்கள் இப்பாரிய தாக்குதலுக்கான முஸ்தீபு நடவடிக்கையே எனக் கருதுகிறோம்.

எனவே இதை எதிர்கொள்ளத் தேவையான சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஈழமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

விமானத் தாக்குதல்களுக்கு உரிய வகையில் பதுங்கு குழிகளைத் தயாரிக்குமாறும் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் நிகழும்போது வேடிக்கை பார்த்தல், கும்பலாக நிற்றல், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வாகனங்களை நிறுத்தி வைத்தல் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறும் போராளிகளின் ஆலோசனைப் படி நடந்துகொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

இது அனாவசிய உயிரிழப்புக்களை தவிர்க்கும். இவ்வாறான தாக்குதல் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நாம் எமது மக்களின் ஆதரவுடன் இறுதிவரை போராடி இதை முறியடிப்போமெனவும் போலித்தனமான அரைகுறைத்தீர்வுகளுக்கு என்றும் அடிபணியப்போவதில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
முடிவடைந்து விட்டது.

கட்டம் கட்டமாக 20 மாணவர்கள் உண்ணாவிரதம் இருப்பார்கள். 19 ஆம் திகதிமுதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகும்.

முதலில் 5 மாணவர்களும் பின்பு ஒவ்வொரு மாணவரும் மரணம் அடையும்போது புதிய ஒவ்வொரு மாணவரும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்பார்கள்.

மிகுதி மாணவர்கள் ஆதரவாக ஒவ்வொரு நாளும் உண்ணாவிரதம் இருப்பர். (இ-5)

## வடமராட்சி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
னர் முன்னேறி வரும் வேளையில் எமது வீரர்கள் எதிர்கொண்டு பலத்த நேரடி மோதலில் இறங்கினர். இத்தாக்குதலால் இராணுவத்தினர் மேலும் முன்னேற முடியாத நிலையில் அந்தந்த இடங்களில் நின்றபடி தாக்குதல்களில் ஈடுபடத் தொடங்கினர்.

வல்வை முகாம் இராணுவத்தினரும் நேற்றுத் தாக்குதல்களை தொடர்ந்தனர். முகாமினுள் இருந்தவாறு மோட்டார்த் தாக்குதல்களை மேற்கொண்டவாறு இருந்தனர்.

தொண்டமானாறுஇராணுவமுகாம் இராணுவத்தினர் நேற்று பல 5 அங்குல மோட்டார் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதன் மத்தியிலும் நாம் தொடர்ந்தும் எமது இறுதி மூச்சுள்ளவரை போராடி இராணுவத்தினரின் இன ஒழிப்பை முறியடிப்போம்.

### வீர மரணம்

தொண்டமானாறில் நேற்று இடம்பெற்ற நேரடி மோதலில் எமது தரப்பில் இரு வீரர்கள் காயமுற்றனர். அதே சமயம் நேரடி மோதலின்போது எமது வீரர் அப்துல்லா (ராஜநாதன் திருமலை) வீரமரணமடைந்தார். இவருக்கு எமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நேற்று இடம்பெற்ற தாக்குதல்களில் ராணுவ தரப்பில் பலர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்-இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)

## சோற்றுப் ---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது.

கூரையைத் துளைத்துக் கொண்டுவந்த துப்பாக்கிக் குண்டு சோற்றுப் பானையைத் துளைத்துக் கொண்டு அடுப்பினுள் புகுந்துகொண்டது.

அரிசி வாங்கச் சென்றவர் திரும்பி வந்து அடுப்படியைப் பார்த்தார். பானை சிதறுண்டு கிடந்ததைக் கண்டார். அடுப்புக்குள் இருந்து குண்டைத்தான் அவரால் எடுக்க முடிந்தது. (அ எ-160)

## வல்லைப்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
அடியில் குண்டுகளைப் பொருத்தினர்.

பின்னர் அவசரம் அவசரமாக ஹெலிக்கொப்டரில் ஏறிச் சென்றனர்.

சில விநாடிகளில் பயங்கரச் சத்தத்துடன் வல்லைப் பாலம் தகர்ந்தது.

இதன் பின்னர் ஹெலிக்கொப்டர்கள் காட்டுப்புலம் பகுதியில் தொடர்ந்து தாக்குதல் நடத்தின.

பிற்பகல் 3 மணியளவில் இருந்து 4 மணிவரை தாக்குல் நிறுத்தப்பட்டது.

பின்னர் தொடங்கிய மோதல் இச்செய்தி எழுதப்பட்டபோதும் (மாலை வரை)தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. (அ-எ-109)

## முல்லைத்தீவு, கிளிநொச்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டன.

இறுதியில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

திரு. பிரபாகரனை தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று இந்தியாவிடம் கோரும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

### நெடுங்கேணியில்

நெடுங்கேணிப் பகுதியில் நேற்றுக்காலை தண்டுவானில் இருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பமானது. பனம்பாத்தி, பட்டிக்குடியிருப்பு, ஒதியமலை ஆகிய கிராமங்கள் ஊடாகச் சென்ற ஊர்வலம் நெடுங்கேணிப் பட்டினத்தைப் பிற்பகல் ஒரு மணி அளவில் வந்தடைந்தது

ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் பிரபாவை விடுவிக்கக் கோரிக் கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் நெடுங்கேணியில் நடந்த பொதுக்கூட்டத்தில் ''பிரபாகரன் தலைமையில் ஒன்றுபடுவோம்'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நெடுங்கேணிப் பகுதியில் ஆயுதபடையினர், ஊர்காவல் படையினர் நடமாட்டம் இருந்தும் ஆயிரக்கணக்கில் மக்கள் இந்த ஊர்வலம்,கூட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவிகள் பகிரங்கமாக சுவரொட்டிகளை ஒட்டினர்.

இந் நிகழ்ச்சிகளை அத்தியாவசிய சேவைகள் குழு, சிவல் தொழிலாளர் சங்கம், இணக்க சபை, கிராம முன்னேற்றச் சங்கங்கள், மாதர், மாணவர் அமைப்புக்கள் ஒழுங்கு செய்தன.

### கிளிநொச்சியில்

எமது கிளிநொச்சிச் செய்தியாளர் அறிவிப்பதாவது:-

''இந்திய அரசே தமிழ் மக்களைக் காக்க எங்கள் பிரபாவை விடுதலை செய்'' ''ஜெயவர்த்தனாவைக் காப்பாற்ற; அப்பாவித் தமிழர்களை பாதுகாக்க புறப்பட்ட தமிழ்த் தலைவன் பிரபா கைதியா?''

இவ்வாறு எழுதப்பட்ட பல கோஷங்களுடன் கிளிநொச்சியில் பல இடங்களிலும் கண்டன ஊர்வலங்களும் கண்டனக் கூட்டங்களும் நடைபெற்றன.

நேற்றுபுதன் கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 15 இடங்களில் இடம்பெற்ற இக் கண்டனக் கூட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்திய அரசால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்வே.பிரபாகரன்; பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை விடுதலை செய்யக் கோரியே இவ்வூர்வலங்களும் கூட்டங்களும் நடைபெற்றன.

கூட்டங்கள் வட்டக்கச்சி, கிளிநொச்சி, இரணைமடு, பாரதிபுரம், ஸ்கந்தபுரம், உருத்திரபுரம், தர்மபுரம்,இராமநாதபுரம், கண்டாவளை, ஆகிய இடங்களில் நடைபெற்றன. (அ-இ-எ-76)

## போராளிகள் கைது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
எவரும் வன்முறைகளில் ஈடுபடக்கூடாதென்ற உத்தரவாதம் பெறப்பட்டது. அதன்பின்பு அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் இவ் உத்தரவாதம் பெறப்பட்டதன்பின்பும் போராளிகள்அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் மீண்டும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இச்செய்கை எம்மை பல வழிகளிலும் சந்தேகம் கொள்ள வைக்கிறது.

போராளிகள் கைது, இந்திய மண்ணில் நிலவிய வன்முறைகளை நிறுத்தவா? அல்லது 'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்ள செல்லும் ஜெயவர்த்தனாவை திருப்திப்படுத்தவா? அல்லது ஐக்கிய இலங்கைக் குட்பட்ட இடைக்காலத் தீர்வொன்றை பலவந்தமாக போராட்ட அமைப்புக்கள் மீது திணிக்கவா?

இந்திய அரசின் தெளிவில்லா காரணமற்ற இந்த நடவடிக்கைகளை அனைத்து தமிழ் பேசும் மக்களும் ஆட்சேபிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## போர்முனை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
களின் வடபிராந்திய பொறுப்பதிகாரி தளபதி கிட்டு மாமா நேரடியாக கலந்து கொண்டு புலிகளின் தாக்குதலை நெறிப்படுத்தினர்.

கிட்டு மாமா தன்னுடன் தனது செல்லப் பிராணியாகிய குரங்கையும் களத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

இந்தக் குரங்கு இராணுவத்தை வேவு பார்ப்பதில் ஈடுபட்ட விதமும் தாக்குதல் முடிந்து திரும்பி வரும்போது நவீன ஆயுதத்தை தனது கரங்களில் தாங்கியபடி போராளிகளுடன் வாகனத்தில் தங்கியிருந்த தோற்றமும் பார்த்த அனைவரின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டன. (இ-11)

## யாழ் பல்கலைக் கழகத்தில் பதிவு

யாழ்ப்பாணம், நவ. 13
1986–87 கல்வி ஆண்டின் கல்வி பட்டப் பின் டிப்ளோமா பகுதிநேர முழுநேர கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் இம் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் யாழ் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று பதிவாளர் அறிவித்திருக்கிறார்.

பகுதிநேர மாணவருக்கான விரிவுரைகள் இம் மாதம் 22ஆம் திகதியும் முழுநேர மாணவருக்கு 24ஆம் திகதியும் ஆரம்பமாகும். (இ-எ)

## யாழ் நகரிலும்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தலைவர்கள் கைது செய்யப்பட்டதையும், வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதையும் குறித்து இந்திய மத்திய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக இந்தப் போராட்டம் நடத்தப்படும் என்று தமிழீழ மக்கள் போராட்டக் குழுப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தலைவர்களைக் கைது செய்தது மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் முதலாவது கண்டன ஊர்வலம் இன்று காலை 9 மணிக்கு பெருமாள் கோவிலில் இருந்து புறப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. (அ-எ)

## சிகரெட், சாரா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தீர்வை 1 லீட்டருக்கு 10 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

பழச்சாறு, ''கோடியல்'', பாணி, கண்ணாடிப் பாத்திரங்கள், ஐஸ்கிறீம், சீப்பு, கண்ணாடி ஆகியனவற்றின் மொத்த விற்பனை வரி 15 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாகஅதிகரிக்கப்பட்டது.

1987-88 ஆம் ஆண்டில் வாகனங்கள், தளபாடங்களுக்கு தேய்மான வரிக்கழிவு அளிக்கப்படும்.

வைத்திய நிலையத்தில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் கட்டணத்திற்கு இனி வரிச் சலுகை இல்லை.

### வரிவிலக்கு

வெளிநாட்டில் வசித்துக்கொண்டு இலங்கை வங்கிகளில் வைத்திருக்கும் கணக்குகளில் உள்ள தொகைக்கு வருமான வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கில் உள்ள பணத்துக்கு எந்தக் காலத்திலும் செல்வ வரி அறவிடப்பட மாட்டாது.

இதுவரை 10 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்வ வரி அறவிடப்படாமல் இருந்து வந்தது.

நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்டத்தில் மேற்கண்ட முக்கிய அம்சங்கள் தெரிவிக்கப்பட்டன. (இ-எ)

## கல்வித்துறை---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
சபை (அங்கத்தவராகத் திகழ்ந்த அமரர் கனகரத்தினம் கல்விச்சபை, மலேரியாத் தடுப்புச் சங்கம், போக்குவரத்து சபை போன்ற பல்வேறு சபைகளில் ஏககாலத்தில் பணியாற்றிப் பலரது பாராட்டையும் பெற்றூர்.

சுயமொழிக் கல்விக்கும் இலவசக் கல்விக்கும் வித்திட்டவர்களில் அமரர் கனகரத்தினமும் ஒருவர். 1871 இல் பிறந்து 1900 இல் சட்டத்தரணியாகி உள்ளூராட்சி மன்றத்தில் பல ஆண்டுகள் சேவையாற்றிச் சட்ட நிருபணசபை அங்கத்தவராயிருந்து 1929 இல் இறைவனடியெய்திய பெரியார் தமது வாழ்வில் அரிய பல நற்காரியங்கள் செய்துள்ளார்.

## அச்சுவேலி..

(2-ம் பக்கத்தொடர்ச்சி)
கொண்டுவரப்பட்டதாகவும்.

அடிக்கடி ஏற்படும் கொள்ளைகளில் இருந்து பாதுகாக்கவும் – இதன் மூலம் பாவனையாளர், அங்கத்தவர்கள் நன்மையடையவும், கூட்டுறவு அமைப்பு பாதுகாக்கப் படவுமே ப. நோ. கூட்டுறவுச் சங்கம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (இ – 119)

## மரண விசாரணை

யாழ்ப்பாணம், நவ.13
நேற்று முன்தினம் வல்வைப்பகுதியில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலின்போது மரணமானசின்னத்தம்பி ரவிக்குமார் (18வயது) (இலக்குவன்) ஆவரங்கால், செபஸ்தியாம் பிள்ளை (20வயது) அச்சுவேலி ஆகியோரது மரணவிசாரணைகள் நேற்று நடைபெற்றன.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினர்.(இ-10)

## அச்சுவேலிப் பகுதியில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பின்னர் தாக்கின.

நேற்றையசம்பவங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

நேற்றுக்காலை 6-15 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட 4 ஹெலிக்கொப்டர்களில் இரண்டு வல்வெட்டித்துறையினை நோக்கியும், இரண்டு அச்சுவேலி வல்லைப் பகுதியை நோக்கியும் வந்தன.

அச்சுவேலி, மண்டான், உடுப்பிட்டி, தொண்டமனாறு,இடைக்காடு, தம்பாலைப் பகுதிகளைச் சுற்றி ரோந்து புரிந்த இரண்டு ஹெலிக்கொப்டர்கள் மூன்று மணித்தியாலமாகத் தொடர்ந்து மாறிமாறித் தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டன.

50 கலிபர் தாக்குதல்களில் மாறிமாறி ஈடுபட்ட கரும் புகைநிற ஹெலிக்கொப்டரும், நீல – மஞ்சள் நிற ஹெலிக்கொப்டரும் நேற்று முன்தினம் தாக்கியபகுதிகளையே நேற்றும் தாக்கின.

ஹெலிக்கொப்டரில் இருந்து ஏவிய ஷெல் அச்சுவேலி வடக்குப் பகுதியிலும் [illegible] வெடித்துச் சிதறின.

8 வீடுகள் இதனால் பாதிப்படைந்தன.

### 30 ஷெல்கள்

தொண்டமானாறு முகாமில் இருந்து அச்சுவேலிப் பகுதியை நோக்கி நேற்று முப்பதிற்கும் மேற்பட்ட 'ஷெல்'கள் ஏவப்பட்டன.

தம்பாலை வைரவர் ஆலயத்தடியிலும், திரு. அருணகிரி என்பவரது வீட்டுக்கண்மையிலும் விழுந்து வெடித்த 'ஷெல்'லினால் இளைஞர் ஒருவர் உடல் சிதறிய நிலையில் அவ்விடத்தில் துடிதுடித்து இறந்தார்.

தலை மட்டும் இருக்க உடல் சிதறிய அந்த இளைஞர் தனது சகோதரரின் திருமண ஏற்பாட்டுக்காக வேறூர் ஊரில் இருந்து வந்தவராவார்.

திரு. அருணகிரியினது வீடு பாதிக்கப்பட்டதுடன் அவரது இரு சகோதரிகளும் ஷெல் தாக்கிக் காயமடைந்தனர்.

வைரவ கோவிலடியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் மேலும் இரண்டு பெண்கள் படுகாயமுற்று யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ 11-119)

யாழ்நகரில்
AGFA விற்பனையாளர்களும்
வண்ணமுறைக் கழுவி பிரதி எடுத்துத் தருபவர்களுமான
ஹேலீஸ் போட்டோ
பிறின்ற் லிமிட்டெட்
வழங்கும்
'AGFA குதூகல இரவு'
(மாபெரும் பண்டிகைக் காலப் போட்டிகளுடன் பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி)
கொக்குவில் இந்துக்கல்லூரியில்
29-11-86 சனிக்கிழமை
பிற்பகல் 1-00 மணிக்கு
பின்வரும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சியுடன்
புகழ்பெற்ற தொலைக்காட்சி, வானொலி திரைப்படக் கலைஞர்களின் பல்சுவை நிகழ்ச்சியும் இடம்பெறும்:
★ படப்பிடிப்பாளர்களுக்கான போட்டி
750 படச்சுருள்களைக் கழுவி, பிரதி எடுக்க ஹேலீஸ் போட்டோ பிரின்ற் லிமிட்டெட்டில் ஒப்படைத்து விலை உயர்ந்த பரிசுகளை வெல்லும் ஊக்குவிப்புப் போட்டியின் முடிவு திகதி வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
28- 11- 86 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
★ மாணவ, மாணவிகளுக்கான போட்டி
கல்லூரி மாணவ, மாணவியருக்கான
"பொது அறிவுப் போட்டி"
29—11—86 சனி பி.ப. 1-00 மணிக்கு
கொக்குவில் இந்துக் கல்லூரி அரங்கில் நடைபெறும்.
ஏற்கனவே தொடர்புகொண்டுள்ள கல்லூரிகளைத் தவிர்ந்த ஏனைய கல்லூரிகள் பங்குபற்ற விரும்பினால்
ஹேலீஸ் போட்டோ பிறின்ற் லிமிட்
380, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.
அனுமதி: Agfa படச் சுருள் வெற்றுப் பெட்டி அல்லது Hayleys Photo Print Ltd இல் புகைப்படம் பிடித்துக் கொண்ட பற்றுச்சீட்டு.
KSB / Ad.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 – ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 13 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60: N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org